26th February 1969]

கொடுக்க ஒத்துக்கொள்ளப்பட்டது. வாங்கிய பிறகு சர்க்கரை விலை இறங்கியதால்தான் ரூ. 305 என்று குறைந்தது. அதைத்தான் அங்கத்தினர் குறிப்பிடுகிறார்கள். வெளியில் ரூ. 305 இருக்கும் போது ரூ. 350 கொடுத்து வாங்கியதாக வீணை குற்றச்சாட்டை சர்க்கார் மீது சுமத்த வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலை முதலாளிகளை அழைத்து கேட்டுக்கொண்டதன் பேரில் அதன் தலைவர் கோதாரி அவர்கள் சர்க்காருடன் ஒத்துழைக்கும் முறையில் ரூ. 350-க்குக் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள்.

Sugar.

* 50. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the South Indian Sugar Factory owners are selling sugar to the public at the rate of Rs. 305 per bag; and

(*b*) the price at which the State Government had purchased sugar from the Sugar Mills per bag of sugar ?

சர்க்கரை

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தென்னிந்திய சர்க்கரை ஆலை அதிபர்கள் சர்க்கரை, மூட்டை ஒன்றுக்கு ரூ. 305 ஆக பொதுமக்களுக்கு விற்பது உண்மையா ?

(இ) தமிழக அரசு மூட்டை என்ன விலைக்கு ஆலைகளிட மிருந்து வாங்கியது ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ) இந்திய அரசு சர்க்கரை கட்டுப்பாட்டை ஓரளவு நீக்கும் திட்டத்தைக் கொண்டு வந்தது. இதன்படி வீடுகளுக்கும், மருத்துவ மனைகள், அனாதை விடுதிகள் போன்ற முன்னுரிமை வகையினருக்கும் வழங்கப்படு வதற்காக இந்நாட்டில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 60 சதவீதம் விதிமுறைக் கொள்முதல் (levy) செய்து எஞ்சிய 40 சதவீதத்தை, இந்திய அரசிடமிருந்து பெறும் விடுவிப்பு ஆணைக்கு உட்பட்டு, சர்க்கரை ஆலைகள் இந்தியாவில் எந்தப் பகுதியிலும் எந்த விலைக்கும் விற்றுக் கொள்ளலாம். எனவே, இம்மாநிலத்திலுள்ள சர்க்கரை ஆலைகள், இந்திய அரசு அனுப்பும் விற்பனை கட்டுப்பாடில்லாத சர்க்கரையை அவை விரும்பும் எந்த விலைக்கும் விற்பனை செய்யலாம்.

(இ) இம் மாநிலத்திற்குள்ளேயே, விற்பனைக் கட்டுப்பாடற்ற சர்க்கரை அளவு முழுவதையும் நியாயமான விலையிலும், எல்லா ருக்கும் கிடைக்கச் செய்வதையும், பெரு மொத்தமாகப் பயன்

படுத்துவோரின் தேவையை நிறைவேற்றுவதையும் முன்னிட்டு, ஆலைகளின் பிரதிநிதியான தென் இந்திய சர்க்கரை ஆலைகள் சங்கத்துடன் உரையாடல் நடத்தியதன் பின்னர், இம் மாநில அரசு, அவர்களுடன் ஏற்பாடு ஒன்றைச் செய்து கொண்டது. இதன்படி வெளிச்சந்தை சர்க்கரையையும், மாநில அரசு, குவிண்டால் ஒன்றுக்கு ஆலைவாயில் விலையாக ex-factory price) குவிண்டால் ரூ. 350 வீதம் எடுத்துக் கொண்டு, உணவுப்பொருள் வழங்கு ஆணையர் நியமித்த மொத்த (வாணிகத்துறை) பயன் படுத்துவோருக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 365-க்கு சில்லரை விலையில் பங்கிட்டுக் கொடுத்தது. இந்த ஏற்பாடு 1968 மே திங்கள் இறுதிவரை நீடித்தது. வெளிச் சந்தை சர்க்கரையின் விலை கணிசமாகக் குறைந்ததைக் கருதி, 1968 ஜுன்-ஜுலையிலிருந்து விற்பனைக் கட்டுப்பாடற்ற சர்க்கரை வாங்கப்படவில்லை.

Movement of paddy.

* 51 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether the farmers have been permitted to sell, within the district, the balance of paddy remaining with them, after giving to the Government the levy paddy?

நெல் போக்குவரத்து

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதில் அளிக்க வேண்டுகிறேன்—

தமிழக விவசாயிகள் சர்க்காருக்கு லெவிக்கு நெல் அளந்தது போக, பாக்கியுள்ள நெல்லை மாவட்டத்திற்குள் எங்கும் விற்க அனுமதிக்கப்படுகின்றதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : விதிமுறைக் கொள்முதலுக்குரிய நெல்லைக் கொடுத்த பிறகு, உபரியாக உள்ள நெல்லை உழவர்கள் தமிழ்நாட்டு 1966-ம் ஆண்டு நெல் (பேரளவு விலைகள்) ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைகளுக்கு மேற்படாத விலைகளில், கொள்முதல் காலமல்லாத பிற காலங்களில் season) அதாவது, தமிழ்நாடு 1968-ம் ஆண்டு நெல்-அரிசிப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டு ஆணையின்கீழ் ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்துக்கு நெல்லையும் அரிசியையும் கொண்டு போவதற்கு எந்தக் கட்டுப்பாடும் இல்லாத காலங்களில், அந்தந்த மாவட்டத்திற்குள் எங்கு வேண்டுமானாலும் விற்கலாம். ஒரு வட்டத்திலிருந்து மற்றொரு வட்டத்திற்கு நெல்லையும் அரிசியையும் அனுப்புவதற்கான தடை, கொள்முதல் காலத்தில் இயன்றவரையில் மிகக் குறைந்த கால அளவிற்குத்தான் விதிக்கப்படுகிறது.